**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C)**

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT COURT, RANIPET**

Case No. **SC.No.103/2023**
Prosecution: **PW3**

Deposition of the witness of **LW3**

| Name | திருமதி.நளினி | District | இராணிப்பேட்டை |
|---|---|---|---|
| Husband Name | திரு.இளங்கோவன் | Occupation | கூலி வேலை |
| Village /Area | திமிரி | Age | 38 |
| Taluk | ஆற்காடு | Aadhar card No. | 9835 3064 2763 |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **05.03.2026.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் ஆற்காடு தாலுக்காவிலுள்ள திமிரி கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் என் ஊரை சேர்ந்தவர்கள். இந்த வழக்கில் இறந்து போன கலையரசன், அடிபட்ட கார்த்தி, கோபி ஆகியோர் என் ஊரை சேர்ந்தவர்கள். சத்யா என்பவர் என் ஊரை சேர்ந்தவர். கடந்த 02.08.2022-ம் தேதி காலை 11.15 மணிக்கு நான் வீட்டிலிருந்த போது சத்யா என்பவர் என் வீட்டிற்கு வந்து என்னிடம் கார்த்தி, கோபி, கலையரசன் ஆகிய மூன்று பேரையும் எதிரிகள் எங்கள் ஊரிலுள்ள ராமபாளையம் சாலையில் வைத்து அடித்து கொண்டிருப்பதாக என்னிடம் கூறி அழைத்தார். உடனே நானும், சத்யா, லலிதா, புவனேஷ்வரி ஆகியோர் அங்கு ஓடிச் சென்றோம். ஆஜர் எதிரிகளில் அசோக் என்பவர் அந்த சமயத்தில் நான் பார்த்த போது ஏற்கனவே அவர்களுக்குள் இருந்த மீன் பிடித்தல் சம்மந்தமான பிரச்சனையை சொல்லி அசிங்கமாக பேசி கலையரசனை கத்தியால் பின் கழுத்தில் வெட்டினார். மற்ற எதிரிகள் வேலி கொம்பால் கார்த்தி, கோபி, கலையரசன் ஆகிய மூன்று பேரையும் அடித்தார்கள். நாங்கள் அதை பார்த்து கத்தினோம். அடிபட்ட மூன்று பேரையும் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். சிகிச்சை பலனின்றி கலையரசன் இறந்துவிட்டதாக சொன்னார்கள். நான் வேலூர் அரசு மருத்துவமனை சென்ற போது காவல் ஆய்வாளர் இறந்த கலையரசனின் உடல் மீது பிரேத விசாரணை மேற்கொண்டார். நான் சாட்சியாக இருந்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

சம்பவம் எப்படி நடந்தது என்று சத்யா என்னிடம் சொன்னார். நான் சென்று பார்த்த போது எதிரிகள் கலையரசன், கோபி, கார்த்தி ஆகியோரை அடித்துக்கொண்டிருந்தார்கள். யார் யார் எந்த ஆயுதத்தால் எப்படி அடித்து எங்கு யார் யாருக்கு காயம் ஏற்பட்டது என்பதை போலிசார் விசாரணையில் சொன்னேன். நான் போலிசார் விசாரணையில் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை என்றாலும், தற்போது மிகைப்படுத்தி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் போகும் போது எதிரிகள் அவர்கள் மூன்று பேரையும் அடித்துக் கொண்டிருந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் மருத்துவமனைக்கு அவர்களை அழைத்து செல்லவில்லை. புவனேஷ்வரி என்பவரும் மருத்துவமனை செல்லவில்லை. நான் சம்பவ இடத்திற்கு போவதற்குள் கார்த்தி என்பவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டார்கள். அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றவர் யார் என்று எனக்கு தெரியாது. அந்த மூன்று பேரையும் எந்தெந்த மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்பதை நான் பின்பு தெரிந்து கொண்டேன். நான் மறுநாள் மருத்துவமனை சென்று கலையரசனை பார்த்தேன். எனக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாமல் போலிசார் சொல்லிக் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் யாரும் கத்தி அல்லது கட்டைகளை பயன்படுத்தி யாரையும் காயப்படுத்தவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:-** இல்லை

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District & Sessions Judge,
Ranipet.